முழுப்பதிப்புரிமையுடையது
All Right Reserved

# மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

புலமைப்பரிசில் - முன்னோடிப் பரீட்சை

5

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

## வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் : .........................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளி | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாம் பரீட்சகர் | |
| | V/I/S |
| இரண்டாம் பரீட்சகர் | |
| | V/I/S |
| மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் | |
| | V/I/S/EMF |
| பிரதான பரீட்சகர் | |
| | V/I/S |

kalvi.lk

1. கீழ் உள்ள உருவை அவதானித்து அதனைப் பற்றிய சரியான கூற்றை தெரிவு செய்க




1) மைதானத்தில் அழகாக புற்கள் வளர்ந்துள்ளன.

2) பிள்ளைகளுடன் வகுப்பாசிரியரும் உள்ளார்.

3) சீசோவொன்றும் ஊஞ்சலொன்றும் உள்ளன

2. கீழே உள்ள வரைபடத்தில் சூரியன் மற்றும் வானவில் என்பன முறையே இருக்கத்தக்க பொருத்தமான இடத்தை குறிக்கும் எழுத்துக்கள்.




1) E மற்றும் C

2) C மற்றும் E

3) A மற்றும் E

3. தரப்பட்டுள்ள பாடலின் இடைவெளிக்கு மிகவும் பொருந்தும் சொற்களை கொண்டமைந்துள்ள விடையை தெரிவு செய்க.

வெள்ளத்திலே ……………………..
விளையாட ……………………..
…………………. வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்

1) கால்வைத்து, வேண்டும், தவருதலாய்

2) கல்லெறிந்து, வேண்டும், வீண்சண்டை

3) கல்லெறிந்து, வேண்டாம், வீண்சண்டையால்

4. காகம் வந்து கரைந்திடலாம் - நான்
கைப்பிடிச் சோறு வைத்திடுவேன்!
தாகம் என்று வருவோர்க்கு – நான்
தண்ணீர் தந்து மகிழ்ந்திடுவேன். இப்பாடல் குறிக்கும் பொருத்தமான கருத்தாக அமைவது.

1) காகத்தின் நடத்தைப்பற்றியது.

2) இவ்வுலகில் ஏற்படும் பிரச்சினைப் பற்றியது.

3) பிரச்சினைகளின்போது நாம் காணும் வழிமுறைப்பற்றியது.

kalvi.lk

சுட்டெண் : ........................................................

❖ கீழே உள்ள கட்டங்களில் உணவு வகைகள், காய்கறிகள், பழங்கள் மற்றும் இனிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அதன்படி வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| A | B | C | D |
|---|---|---|---|
| பலகாரம்<br>கரட்<br>அப்பம்<br>பப்படம் | பீட்<br>வற்றாளை<br>லீக்ஸ்<br>உருண்டை | அன்னாசி<br>வற்றாளை<br>வட்லாப்பம்<br>மங்குஸ் | இடியப்பம்<br>போஞ்சி<br>பாண்<br>கௌப்பி |

5. இனிப்பு சுவையுடைய உணவு வகைகள் உள்ளடங்குவது.
   1) A  2) C  3) D

6. காலை உணவினை உள்ளடக்கிய கட்டமாக அமையக் கூடியது.
   1) B  2) C  3) D

7.


| | | | |
|---|---|---|---|
| 3 | 2 | 2 | 12 |
| 3 | **A** | 1 | 12 |
| 1 | 2 | **B** | 10 |
| 9 | 16 | 10 | |

B மற்றும் A இடத்திற்கு வரவேண்டிய பொருத்தமான எண்களை முறையே கொண்டமைந்த விடை

   1) 5 – 4  2) 4 – 5  3) 8 - 7


8. 6 + [6 x 3] = 24 கட்டத்தினுள் உள்ள எண்கள் இரண்டிற்கும் பதிலாக பயன்படுத்தக்கூடிய எண் பிணைப்பாக அமையத்தக்கது.
   1) 9 X 2  2) 14 + 5  3) 8 + 7


9. கீழே தரப்பட்டுள்ள சதுரமுகி போன்ற சதுரமுகிகளை இணைத்து அமைக்கக்கூடிய பெரிய சதுரமுகி ஒன்றை அமைக்க மேலும் தேவையான சதுரமுகிகள் எத்தனை.



   1) 7  2) 6  3) 9

❖ A, B கயிற்றில் தொங்கவிடப்பட்டுள்ள நிற கொடிகளை அவதானித்து 10 மற்றும் 11 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




kalvi.lk

10. சிவப்பு நிறக் கொடி கறுப்பு நிறக் கொடி இருக்கும் இடத்திற்கும், ஊதா நிறக் கொடி கபில நிறக் கொடி இருக்கும் இடத்திற்கும், நீல நிறக் கொடி பச்சை நிறக் கொடி இருக்கும் இடத்திற்கும், இளஞ்சிவப்பு நிறக் கொடி மஞ்சள் நிறக் கொடி இருக்கும் இடத்திற்கும் மாற்றி கட்டப்பட்டது. தற்போது வெள்ளை நிறக் கொடிக்கு இருபுறமும் தொங்கும் கொடிகள் எவை?

1) பச்சை – கபிலம்     2) சிவப்பு – கறுப்பு     3) நீலம் - ஊதா

11. கொடிகளை மாற்றியதன் பின்னர் B கயிற்றில் ஆரம்பம் முதல் கடைசி வரை காணப்படும் கொடிகளின் நிறங்கள் முறையே

1) கபிலம் - பச்சை - கறுப்பு - இளஞ்சிவப்பு - செம்மஞ்சள்
2) ஊதா - நீலம் - சிவப்பு - மஞ்சள் - செம்மஞ்சள்
3) ஊதா - பச்சை - கறுப்பு - இளஞ்சிவப்பு - செம்மஞ்சள்


12. குறித்த ஒரு வருடத்தின் குறித்த ஒரு மாதத்தின் முதலாம் திகதி திங்கட்கிழமையாவதுடன் அம் மாதத்தின் இறுதி நாளும் திங்கட்கிழமையாகும். அதன்படி இக்கூற்று.

1) சரி     2) பிழை     3) கூறமுடியாது

13. 1, 2, 3, 6, 11, 20, 37, ………… இக் கோலத்தில் அடுத்த இடைவெளியில் அமையக்கூடியது

1) 60     2) 68     3) 78

14. கீழே தரப்பட்டுள்ள சில்லுகள் இரண்டையும் இரும்பு சங்கிலி கொண்டு சுழல செய்யும் முறை காட்டப்பட்டுள்ளது. இப்பற்சில்லுகள் இரண்டும் சுற்றும் முறை தொடர்பில் சரியான கூற்றாக அமைவது எது?





1) A சில்லு சுழலும் திசைக்கே B சில்லும் சுழலும்.

2) A சில்லு சுழலும் திசைக்கு எதிர் திசையில் B சில்லும் சுழலும்.


3) A சில்லையும் B சில்லையும் சுழற்ற முடியாது.

15. இசுரு கடிகார முகம் ஒன்றை வரைந்து அதில் கூட்டுத்தொகை பன்னிரண்டு கிடைக்க கூடியவாறான இரு இலக்கங்களை இணைத்து கோடு வரைகிறார். அவரால் இவ்வாறு எத்தனை கோடுகளை வரையமுடியும்?




1) 12     2) 5     3) 3

16. பெரிய மரக்குற்றி ஒன்றில் சிறிய சதுரமுகிகள் பலவற்றை வெட்டி வேறாக்கி பெற கோடுகள் வரையப்பட்டு படத்தில் உள்ளவாறு நடுவில் உள்ள சதுரமுகிகளின் முகம் ஒன்றிற்கு கறுப்பு நிறம் பூசப்பட்டுள்ளது. அதன்படி சிறிய சதுரமுகிகள் வேறாக்கப்பட்ட பின் ஒரு முகத்திற்கேனும் நிறம் பூசப்படாத சதுரமுகிகள் எத்தனை கிடைக்கும்.




1) 1     2) 21     3) 3

17. ஓட்டப்போட்டி ஒன்றில் முறையே நிகாரா, நிகினி மற்றும் நிலானி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களில் ஓடுகின்றனர். போட்டி முடியும் போது இரண்டாம் இடத்தில் இருந்த நிகினியை பின்தள்ளி நிலானி முந்தி சென்றாள். தற்போது நிலானி இருக்கும் இடமாவது.

1) முதலாம் இடம்  2) இரண்டாம் இடம்  3) மூன்றாம் இடம்


❖ 18 மற்றும் 19 ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள இரண்டாக மடிக்கப்பட்டுள்ள தாளைக் கொண்டு விடை தருக. இருமுறை மடித்துள்ள தாளை விரித்து பார்க்கும் போது தெரியும் வடிவமானது

18.




1)  2)  3)


19.





1)  2)  3)

20. கீழே கணித பிரசினத்தை பயன்படுத்தி 20 மற்றும் 21 ம் வினாக்களுக்கு விடை தருக.




 இன் பெறுமதி

1) 1  2) 2  3) 3

21  = 11 எனின்  இன் பெறுமதி


1) 4  2) 5  3) 3

kalvi.lk


22. மூன்று பலகை துண்டுகள் ஒன்றாக ஆணி அடித்து இணைக்கப்பட்டன. பலகைத்துண்டுகள் இரண்டை ஒன்றுடன் ஒன்று இணைக்க 5 cm அளவு நீளம் ஒதுக்கப்பட்டது. ஒரு பலகைத்துண்டின் நீளம் 30cm ஆகும். அதன்படி அம் மூன்று பலகைத்துண்டுகளும் இணைக்கப்பட்டதன் பின்னரான மொத்த நீளம் யாது?




1) 70cm 2) 80cm 3) 90cm

23.



எனின்





1)  2)  3) 


24. ஏற்றப்பட்ட மெழுகுதிரி ஒன்று சாய்த்து போடப்பட்டால் தோன்றும் விதம் சரியாக காட்டப்பட்டுள்ள விடையை தெரிவு செய்க.


1)


2)


3)


25.



முழு உருவில் உள்ள மொத்த கட்டங்கள் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் கட்டங்களை போல் எத்தனை மடங்காகும்.

1) மூன்று மடங்கு 2) நான்கு மடங்கு 3) ஐந்து மடங்கு


26.



இதில் உள்ள முக்கோணங்களினதும் சதுரங்களினதும் எண்ணிக்கை முறையே.


1) 3 – 3 2) 8 – 2 3) 5 - 3

27. உருவில் உள்ள நாற்பக்கல்களின் எண்ணிக்கை யாது?



2) 10 2) 25 3) 20

28. A மற்றும் B பாத்திரங்களில் உள்ள நீரின் அளவு கீழே தரப்பட்டுள்ளது.





= ........... இடைவெளியில் வர வேண்டிய பெறுமானம்.

1) 1.4 *l* 2) 1.6 *l* 3) 1.5 *l*

29. இரண்டு லீற்றர் நீரை மேலுள்ள சிறிய பாத்திரங்கள் எத்தனையில் ஊற்ற முடியும்.

1) 5 2) 10 3) 20

30. சதுரமுகி மூன்றினை மேசையொன்றின் மத்தியில் கீழே உள்ளவாறு வைக்கும் போது வெளியில் தெரியும் முகங்களின் எண்ணிக்கை எத்தனை?



1) 12 2) 14 16) 16

31. கீழுள்ள எண் வரிசையில் எண்கோளம் ஒன்றை உருவாக்குவதற்காக உள்ளடக்க கூடிய பொருத்தமான எண்?

1, 2, 4, 7 ............. , 16

1) 12 2) 11 3) 13

❖ வாக்கியத்தை வாசித்து அதனைக்கொண்டு 32, 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

தானிய உணவில் பொதுவாக...........**#**............. இருக்கின்றது.
இது உணவு ..........**@**................ முக்கியமானதாகும்

32. மேலே **#** குறியுள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொல்

1) பச்சைநிறம் 2) மாச்சத்து 3) அரிசியும்

33. மேலே **@** குறியுள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொல்

1) வேளையில் 2) ஆசையில் 3) வாசத்தில்

kalvi.lk

34. ஒரு கண்ணாடியில் எப்போதும் காணக் கூடியது.

1) பிரதி 2) பிரதி உருவம் 3) பிரதி விம்பம்

35. கீழே நான்கு கட்டங்கள் கொண்ட கடதாசி கீலம் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|

- முதல் கட்டத்தில் மூலவர்ணம் ஒன்று உள்ளது.
- நான்காவது கட்டத்தில் பச்சை நிறம் உள்ளது.
- மூன்றாவது கட்டத்தில் ஊதா நிறம் உள்ளது.
- நான்காவது கட்டத்தில் முதல் இரு கட்டங்களிலும் உள்ள வர்ணங்கள் கலந்து உள்ளன.

அதன்படி முதல் இரு கட்டங்களிலும் உள்ள வர்ணங்களாவன.

1) நீலம் - சிவப்பு 2) நீலம் - மஞ்சள் 3) சிவப்பு - மஞ்சள்

36. அம்மா, மகளிடமிருந்து எப்போதும் வேறுபடுவது.

1) வயதில் 2) வடிவத்தில் 3) உயரத்தில்

37. எண்கோண வெசாக்கூட்டில் காணப்படும் முக்கோணங்கள் எத்தனை?




1) 4 2) 6 3) 8


38. புத்தகங்கள் இரண்டினது விலை பேனை ஒன்றினது விலைக்கு சமமாகும். பேனைகள் இரண்டினது விலை பந்து ஒன்றின் விலைக்கு சமமாகும். இரண்டு பந்துகளின் விலைக்கு எத்தனை புத்தகங்கள் வாங்க முடியும்.


1) 4 2) 6 3) 8


39. 8 மீற்றர் கம்பி ஒன்றிலிருந்து நாள் ஒன்றுக்கு ஒரு மீற்றர் என வெட்டி அகற்றப்படும். அவ்வாறாயின் கம்பியை முழுமையாக வெட்டி முடிக்க எடுக்கும் நாட்கள் எத்தனை?

1) 7 நாட்கள் 2) 9 நாட்கள் 3) 8 நாட்கள்

40.  எனின் கீழே தப்பட்டுள்ள பிரசினங்களில் இருப்பக்கமும் சமனாகும் விடையை தெரிவு செய்க.

1) 

2) 

3) 

***

kalvi.lk

முழுப்பதிப்புரிமையுடையது
All Right Reserved

# மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

புலமைப்பரிசில் - முன்னோடிப் பரீட்சை

5

மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

## வினாத்தாள் - II

1.15 மணித்தியாலம்

சுட்டெண் : ........................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- விடைகளின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளி | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| முதலாம் பரீட்சகர் | |
| | V/I/S |
| இரண்டாம் பரீட்சகர் | |
| | V/I/S |
| மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் | |
| | V/I/S/EMF |
| பிரதான பரீட்சகர் | |
| | V/I/S |

kalvi.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

தொடர்பாடலுக்காக மொழியை பயன்படுத்துவது மனிதனுக்குரிய சிறப்பியல்புகளில் ஒன்று. தனது எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்கு அறியச் செய்வது மொழியாகும். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. அவற்றுள் சில மொழிகளே செம்மொழியாக புகழ் பெற்றுள்ளன. அம்மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழ் மொழி கேட்பதற்கு இனிமையானது. தமிழ் இலக்கியங்கள் ஓசைநயம், சொல்வளம், பொருட்செறிவு கொண்டவை. "யாமறிந்த மொழிகளே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழ்மொழியின் இனிமையை சுப்ரமணிய பாரதியார் வியந்து பாடியுள்ளார். தமிழ் மொழி அது காலத்துக்கேற்ப மாற்றங்களைப் பெற்று தன்னை நிகழ்நிலை படுத்தி கொள்ளும். தமிழ் மொழி பேசவும் வாசிக்கவும் எழுதவும் வசதியான மொழி. தமிழ்மொழியின் பல்வகை சிறப்புகளுள் அதன் சொற்சிறப்பும் குறிப்பிடத்தக்கது.

மேலுள்ள பந்தியை துணையாகக் கொண்டு 1 தொடக்கம் 6 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

1. செம்மொழியென புகழ்பெற்ற மொழியாக பந்தியிலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி எது?
   …………………………………………………………………………………………………..
2. தமிழ்மொழியின் இனிமையை சுப்ரமணிய பாரதியார் எவ்வாறு வியந்து பாடியுள்ளார்?
   …………………………………………………………………………………………………..
3. **இகழ்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
   ………………………………………………………………………………………………….
4. தமிழ்மொழியின் சிறப்புக்களில் ஒன்றை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
   ………………………………………………………………………………………………….
5. செம்மொழி என்பதை பிரித்து எழுதுக.
   ………………………………………………………………………………………………….
6. உயர்திணை ஒருமை படர்க்கை பெயர்ச்சொல் ஒன்றை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
   …………………………………………………………………………………………………..

2. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி நிகழ்கால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.
   1. அம்மா கடைக்கு சென்று சீயக்காய் வாங்கி வந்தார்.
      …………………………………………………………………………………………
   2. கமலன் கைமாறு கருதாமல் பிறருக்கு உதவி செய்வான்.
      ……………………………………………………………………………………………

3. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் அடையாளம் இடுக.
   1. ஒவ்வொரு கதைகளும் சுவையானது. ( )
   2. மாணவர்கள் புகைவண்டியில் சென்று இறங்கியது. ( )
   3. நோன்பு நோற்பதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றது ( )
   4. நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. ( )
   5. கொழும்பு நகரில் சனக்கூட்டங்கள் நிரம்பி வழிந்தது. ( )

4. பின்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

வண்ணத்துப்பூச்சி உன் பூர்வீகம் பற்றி கூறுவாயா என்று கேட்டால் சித்ரா

சுட்டெண் : ..........................................................

5. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

பொறுமை/ எம்மிடம்/ உன்னதமான/ ஒன்று/ காணப்படவேண்டிய/ பேணுதல் /பண்புகளில் /ஆகும்

………………………………………………………………………………………………

6. பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமான பழமொழிகளை புள்ளி கோட்டில் எழுதுக.
   1. இளமையில் எதிர்காலம் புலப்படும்.

   ………………………………………………………………………………………………………
   2. மானத்துடன் வாழ வேண்டும்.

   ………………………………………………………………………………………………………

7. பொருத்தமான பிஞ்சு மரபு பெயரினை எழுதுக.

மா - வடு எனின் வாழை - …………………………..

8. அறுபதாவது ஆண்டிலே கொண்டாடப்படும் விழா எது? சரியான விடையின் கீழ் கோடிடுக.
   பொன்விழா / வைரவிழா.

9. பின்வரும் இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.
   (குயில், நாம், நீ, கற்கள், தோழர்கள்)
   1. அஃறினை படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல் - …………………………………………….
   2. உயர்திணை முன்னிலை ஒருமை பெயர்ச்சொல் - ……………………………………….

10. பின்வரும் இணை மொழியை பூர்த்தி செய்க.
    வாடி .........................

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
    1. broom - ............................................ 2. Accident - ........................

12. கீழே தரப்பட்டுள்ள தமிழ் வாக்கியத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கிலத்தில் எழுதுக.
    1. எனக்கு நீந்த முடியும் - ..........................................................................................................
    2. உங்கள் பெயர் என்ன? - ..........................................................................................................

13. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.
    1. எனக்கு தண்ணீர் வேண்டாம் - ……………………………………………………………
    2. உங்கள் ஊர் எது - ……………………………………………………………

14. கயிறு ஒன்றின் நீளம் 12m ஆகும். அதில் சேதமடைந்த 3m 85cm பகுதியை வெட்டி அகற்றியதன் பின்னரான கயிற்றின் நீளம் யாது?

………………………………………………………..

kalvi.lk

15. ஒருவர் ரூபாய் 185.00 பெறுமதியான பொருள் ஒன்றை ரூபாய 50.00 விலை குறைத்து, ரூபாய் 500.00 தாள்காசு கொடுத்து வாங்கினார். எனின், அவருக்கு கிடைக்கும் மீதிப் பணம் யாது?

……………………………………………………

16. ஒன்று ரூபாய் 20.00 படி 100 மாம்பழங்களை வாங்கிய ஒருவர் அவற்றின் அரைவாசியை ரூபாய் 25.00 இற்கும் மீதி அரைவாசியை ரூபாய் 23.00 இற்கும் விற்பனை செய்தார். எனின், அவர் மாம்பழம் விற்று பெற்ற இலாபம் எவ்வளவு?

……………………………………………

17. 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் மண்ணெண்ணையை 750 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்ப முடியும்?

………………………………………………………….

18. 84 பென்சில்களில் $\frac{3}{4}$ பங்கு மாணவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் பென்சில்கள் எத்தனை? …………………………………….

19. முற்பகல் 6.30 இற்கு கண்டியிலிருந்து புறப்பட்ட பேரூந்து ஒன்று முற்பகல் 10.10 ற்கு கொழும்பை சென்றடைந்தது. எனின், பயணத்திற்கு செலவாகிய நேரம் எவ்வளவு?

………………………………………………….

20. கீழ் காணும் கணித செய்கையில் வெற்று கட்டத்திற்கு பொருத்தமான பெறுமானத்தை எழுதுக.


137 + ☐ + 49 = 304

21. துவிச்சக்கரவண்டி ஒன்று நிமிடத்திற்கு 1km பயணிக்கும். முற்பகல் 6.30 இற்கு பயணத்தை ஆரம்பித்த துவிச்சக்கரவண்டி முற்பகல் 8.45 இற்கு பயணத்தை நிறைவு செய்ததாயின் பயணித்த தூரம் யாது?

……………………….km

22. 3143 என்ற எண்ணில் நூறினிடத்தின் பெறுமதியை இரண்டு மடங்காக்கும்போது உருவாகும் எண்ணிற்கும் 3143 ற்கும் இடையிலான வித்தியாசம் யாது?


…………………………………….

23. 

இவ்வுருவத்தினுள் எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

………………………………………….

❖ குறித்த விளையாட்டு ஒன்றிற்காக வரையப்பட்டுள்ள திட்டமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது. அதில் வடக்கு - தெற்கு திசை கோடுகள் சமன் அதேபோல் ஈசான – நிருதி திசை கோடுகள் சமனாகும். (A மற்றும் B இற்கிடையிலான தூரம் 8m. B மற்றும் C இற்கிடையிலான தூரம் 12m)




24. A இலிருந்து M வரையில் படத்தில் காட்டியுள்ள பாதை வழியாக ஓடும் ஒருவர் வடக்கு தெற்கு திசையாக ஓடிய முழு தூரம் யாது?
………………………………………………..

25. M இலிருந்து A வரை திரும்பி வருவாறாயின் நிருதி திசைக்கு ஓடும் தடவைகள் எத்தனை?
…………………………………………………….

26. A இலிருந்து M வரையில் ஓடி மீண்டும் A இக்கு வருவாறாயின் அவர் பயணித்த மொத்த தூரம் யாது?
…………………………………………………

27. போத்தல் ஒன்று அரைவாசி நிரம்பியிருந்த போது அதன் நிறை 800g ஆகும். போத்தல் முழுதும் நிரம்பிய போது அதன் நிறை 1kg 400g ஆகும். வெற்று போத்தலின் நிறை யாது?
…………………………………………

28. 5 தீக்குச்சிகளை பயன்படுத்தி 1 - 20 வரை ஆக்கக் கூடிய உரோமன் எண்களை எழுதுக.
………………………………………………………………………………………………………………

29. எனது நிறை 25kg 700g ஆகும். தந்தையின் நிறை எனது நிறையின் இரண்டு மடங்குடன் 8kg அதிகமாகும். எங்கள் இருவரினதும் மொத்த நிறை யாது?
……………………………………

❖ சரியான விடையை தெரிவு செய்து கோடிடுக.

30. குருத்தோலை அலங்காரங்களுக்கு பயன்படுத்தும் தாவரம்.

1. தென்னை 2. வாழை 3. கற்றாளை

31. நிதஹஸே மந்த்ரய (சுதந்திர மந்திரம்) என்ற நூலை எழுதியவர்.

1. வண. எஸ். மஹிந்த தேரர். 2. எம். எல். எஸ் குரு முஹந்திரம் 3. எஸ். எம். செனவிரத்ன.

32. ஒலிம்பிக் பதக்கத்தை வென்று இலங்கைக்கு புகழை தேடித் தந்த வீராங்கனை.

1. தமயந்தி தர்சா 2. ஸ்ரீயானி குலவன்ச 3. சுசந்திகா ஜயசிங்க

33. இலங்கையில் மிகப்பெரிய நிலப்பரப்பை கொண்ட மாவட்டம்

1. அனுராதபுரம் 2. கொழும்பு 3. குருநாகல்

34. சீகிரியா எந்த மாகாண எல்லைக்கு உட்பட்டது.

1. வடமத்திய  2. மத்திய  3. மாத்தளை

35. ஸ்ரீ விக்ரம சர்வசித்தி என்ற பெயரில் அரசனானவர்.

1. வீர கெப்பட்டிபொல  2. கொங்காலே கொடபண்டா  3. விமலதர்மசூரியன்

36. இலைகளின் அடிப்பகுதியில் முட்டையிடும் பிராணி

1. பட்டாம்பூச்சி  2. டினிசியா  3. நத்தை

37 சூரியனில் உள்ள வர்ணங்களின் எண்ணிக்கை

1. 3  2. 8  3. 7

38. பிங்க ஓயா பெருக்கினால் நீரில் மூழ்கி பாதிப்புக்குள்ளான கண்டி மாவட்டத்தில் உள்ள நகரம்

1. தெல்தெனிய  2. அக்குரணை  3. கம்பளை

39. சமையலுக்காக தயார் செய்யும் போது கூடிய பகுதிகள் ஒதுக்கப்படுகின்ற கீரை வகை

1. பொன்னாங்கண்ணி  2. வல்லாரை  3. அகத்தி

40. மாவு சலிப்பதற்கு, அரிசி புடைப்பதற்கு, தானியங்களை அரைப்பதற்கும் கலப்பதற்கும் தேவையான உபகரணங்களின் தொகுதி முறையே.

1. சல்லடை, சுளகு, கிரைண்டர், பிளெண்டர்
2. பால்வடி, அரிச்சட்டி, சுளகு, கிரைண்டர்
3. சுளகு, கிரைண்டர், சல்லடை, பிளெண்டர்

41. பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ சின்னத்தில் காணப்படும் விலங்கு எது?

1. குதிரை  2. பருந்து  3. யானை

42. தீதாள் அணிந்துக்கொள்ளும் விரலாவது.

1. ஆள்காட்டி விரல்  2. மோதிர விரல்  3. கட்டை விரல்.

43. வனைதல் சில்லை பயன்படுத்தும் தொழில்

1. தச்சு தொழில்  2. விவசாயம்  3. மட்பாண்ட தொழில்

44. இலங்கையில் முதல் முதலில் தேயிலை செடி நடப்பட்ட இடம்.

1. பேராதனை தாவரவியல் பூங்கா
2. லூல்கந்துர தோட்டம்
3. செனரத்கொட தாவரவியல் பூங்கா

45. செவ்வரத்தை பூவின் இதழ்களின் எண்ணிகை

1. 5  2. 6  3. 4

46. “பச்சை வளையல் தொட்டு ஏலேலோ மயில்…” என்ற பாடல் பாடப்படும் சந்தர்ப்பம்.

1. உமி, தவிடு, உடைந்த மணிகளை நீக்க சுளகு கொண்டு அரிசி புடைக்கும்போது.
2. அரிவி வெட்டும் போது.
3. வயல் உழும்போது.

47. ஒரு தகவல் தொடர்பு முறையை நிகழ்த்துவதற்கு 3 அத்தியாவசிய கூறுகள் முறையே.

1. பெறுநர் ஊடகம் அனுப்புனர்
2. அனுப்புனர் ஊடகம் பெறுநர்
3. கடிதம், அனுப்புபவர், பெறுநர்.

48. படத்தில் காட்டப்பட்டுள்ள மாகாணம்



1. சப்ரகமுவ மாகாணம் 2. ஊவா மாகாணம் 3. வடமத்திய மாகாணம்

49. பழுதடைந்த தேங்காய் எண்ணெயில் காணப்படும் ஒரு பண்பு

1. நிறமாற்றம் 2. துர்நாற்றம் வீசுதல் 3. கட்டியாதல்

50. சூடான பொருளொன்றை பிடிப்பதற்காக பயன்படுத்த கூடிய மிகவும் பொருத்தமானது கருவி

1. இடுக்கி 2. சுத்தியல் 3. கத்தரிக்கோல்

51. காகத்தின் கூட்டில் முட்டை இடும் பறவை எது?

1. குயில் 2. வெளவால் 3. செண்பகம்

52. விபத்து ஒன்று ஏற்பட்டால் முதலில் செய்ய வேண்டியது

1. உதவிக்கோருதல் 2. கலவரமடையாதிருத்தல் 3. ஆட்களைச் சேர்த்தல்

53. பராக்கிரம சமுத்திரம் அமைந்துள்ள மாகாணம்

1. வடமத்திய மாகாணம் 2. மத்திய மாகாணம் 3. வடமேல் மாகாணம்

54. மணலுக்குள் வைத்து பாதுகாக்க முடியாத பொருள் எது?

1. தேசிகாய் 2. பலா விதை 3. ஈரப்பலா

55. படகமுவ காடு அமைந்துள்ள மாவட்டம்

1. அனுராதபுரம் மாவட்டம் 2. நுவரெலியா மாவட்டம் 3. குருநாகல் மாவட்டம்

56. இலையின் அடிப்பகுதி வெள்ளி நிறமாக காணப்படுவது.

1. வேம்பு 2. நாகமரம் 3. மஹோகனி

kalvi.lk

57. கீழே படத்தில் இருப்பவர்.



1. ஆறுமுக நாவலர் 2. ஆனந்தக் குமாரசுவாமி 3. டி பி ஜாயா

58. வாய் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட காரணமாவது

1. விட்டமின் சி குறைபாடு 2. விட்டமின் டி குறைபாடு 3. கொழுப்புக் குறைபாடு

59. நத்தையை உணவாக எடுக்கும் பறவை.


1. செண்பகம் 2. பருந்து 3. வௌவால்

60. மதி என்ற மாணவன் நேரம் கடந்து விட்டது என்ற அவசரத்தோடு பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த வேளையில் இனம்தெரியாத ஒரு நபர் சிறிய பொதி ஒன்றை அவனிடம் கொடுத்து தரம் 5 ல் கல்வி பயிலும் ரிதி என்ற மாணவனுக்கு கொடுக்கும் படி கூறினார். இதன் பிறகு நடந்தவற்றை கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக காணப்படல் வேண்டும்.

1) ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
3) ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

***

kalvi.lk




# தரம் 5
# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

BUY BOOKS

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page